[டாக்டர் சி. விஜயபாஸ்கர்] [2015 செப்டம்பர் 28

சென்னையிலே மட்டும் 7 அம்மா உணவகங்கள். அதேபோல இதர மாவட்டங்களில் 23 அம்மா உணவகங்கள் என 30 அம்மா உணவகங்கள் அமைக்கப்பட்டு, மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள் எல்லோருமே இன்றைக்குப் பயன்படுத்துகின்றார்கள். அந்த வகையிலே, ஒரு வரப்பிரசாதமாக அம்மா உணவகங்களை வழங்கி, இன்றைக்கு அரசு மருத்துவமனைகளில் எல்லா வசதிகளையும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள்; கட்டமைப்பு வசதிகளைக் கொடுத்திருக்கிறார்கள்; மருத்துவ வசதிகளைக் கொடுத்திருக்கிறார்கள்; கழிவறை வசதிகளைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த கழிவறைகளைப் பராமரிக்க, இன்றைக்கு out sourcing முறையில், ஏறத்தாழ 5,000-க்கும் மேற்பட்ட பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, புறத் தூய்மை, hospitals, clean and green campus என்று சொல்லக்கூடிய அந்த முறையிலே பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்றைக்கு யோசனையாகக் குறிப்பிட்டிருக்கக்கூடிய அந்த இரவு நேரக் காப்பகங்களை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு யோசித்து, ஏற்கெனவே திட்டமிட்டு, மதிப்பீடு செய்து, அவற்றிற்கான டெண்டர் விடப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்ற நல்ல தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் பாராட்டிக் கொண்டு இருக்கக்கூடிய அளவிற்குத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள், இந்தத் துறையை வழி நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

6. அறிக்கைகள் அளித்தல்

மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கை அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள்.

2015 செப்டம்பர் 28]

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்திலேயே முன்னேறிய நாடுகளுக்கெல்லாம், முன்மாதிரியாக தமிழ்நாட்டையும், தமிழ் இனத்தையும் உயர்த்த வேண்டுமென்ற உயரிய இலட்சியத்தோடு, கண் துஞ்சாமல், நாளெல்லாம் உழைக்கும் தமிழ்த்தாயின் மூத்த குடிமகளாக இருக்கின்ற, நாங்கள் வணங்கும் இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–40

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2014–2015 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் பதினெட்டாவது மற்றும் பத்தொன்பதாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். நன்றி.

7. அறிவிப்பு

பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை மற்றும் மேலாண்மைக் குழுமம் ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னை பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவை மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக மேலாண்மைக் குழுமம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள தலா ஒரு வெற்றிடத்திற்கு சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்குமாறு சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன.

சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரின் பதவிக் காலம் 7–2–2016 வரை ஆகும்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக மேலாண்மைக் குழுமத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரின் பதவிக் காலம் 16–8–2017 வரை ஆகும்.

தேர்ந்தெடுக்கப் பெற விரும்பும் வேட்பாளர்கள் தங்களின் வேட்புத் தாளினை 29–9–2015 காலை 10–00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாள்